

மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.34.90 இலட்சம் மதிப்பில் வார்டு71, பல்நோக்கு மையக் கட்டடத்தினை பயன்பாட்டிற்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். உடன் மேயர் ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ. மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார் புனிதவதி எத்திராஜன் எம்.சி. அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஏரி (வைரமேக தடாகம்) நிரம்பியதை அடுத்து நரிமடையில் நீர் வழிந்து வெளியேறுவவை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மலர் தூவி வரவேற்று, ஏரியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் க.செல்வம் எம்.பி., ஒன்றியகுழு தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பொன்.சசிகுமார், எஸ். தயாளன், சுகுணா சுந்தரராஜன், ஆதிநாராயணன், கோபிநாத், கிருஷ்ணன், ஒன்றியகுழு உறுப்பினர் கலைச்செல்வி உமாபதி முன்னாள் தலைவர். பெருமாள். மற்றும்கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த

# உலக புத்தொழில் மாநாடு வெற்றி! ரூ.127 கோடி முதலீடுகள் ஈர்ப்பு!

## புதிய வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும்!

சென்னை அக். 20 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவையில் தொடங்கி வைத்த உலக புத்தொழில் மாநாட்டில் 45 நாடுகள் பங்கேற்று ரூ.127 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. உலக புத்தொழில் மாநாட்டை கோவையில் உள்ள கொடிசியா வர்த்தக வளாகத்தில் கடந்த 9ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதில் பேசிய முதல்வர், தமிழ்நாட்டில் முதலீட்டு சூழலை வலுப்படுத்தும் நோக்கில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் இணை உருவாக்க நிதியத்தினை அறிவித்தார்.

இதையடுத்து பெல்ஜியம் நாட்டினை சேர்ந்த ஹப் பிரசல்ஸ் என்னும் அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட 2 தமிழ்நாட்டினை சேர்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு அந்நாட்டில் நிறுவனங்களின் விரிவு செய்வதற்கு அனுமதி கடிதங்களை வழங்கியது. குறிப்பாக 2 நாட்களில் 72,278 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். இது நாட்டின் மிகப்பெரிய புத்தொழில் மாநாடாக அமைந்தது. மாநாட்டில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் 609 ஆளுமைகள் உரை நிகழ்த்தியுள்ளனர்.

தொழில் முனைவு ஆளுமைகள் பலரும் இணைந்து கொள்கை வடிவமைப்பு புத்தாக்க தொழில்கள், நிலைத்த வளர்ச்சி மற்றும் உலக நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்தனர். முதலீட்டாளர் சந்திப்பு அமர்வுகள் மாநாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக அமைந்தன. 115 முதலீட்டாளர்கள் பங்கேற்றனர். 453 புத்தொழில் நிறுவனங்கள் முதலீட்டாளர்கள் முன் தங்களது நிறுவனங்களை அறிமுகப்படுத்தினர்.

இதன் மூலம் முதலீட்டு வாய்ப்புகள் வழிகாட்டுதல் மற்றும் இணைப்பு முயற்சிகள் உருவாகின. மாநாட்டுக்கு முன்பாக ரூ.127.09 கோடி முதலீட்டு உறுதிப்பாடு கிடைத்தது. மேலும் பல ஒப்பந்தங்கள் அடுத்த மாதங்களில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1012 அரங்குகளுடன் மாபெரும் புத்தொழில் மற்றும் புத்தாக்க கண்காட்சி நடைபெற்றது. இதில் 21 நாடுகளில் இருந்து அரங்குகள் அமைத்திருந்தனர்.

12 பெரு நிறுவனங்கள், இந்தியாவின் பிற மாநிலங்களை சார்ந்த 8 புத்தொழில் இயக்கங்கள், புத்தொழில் மற்றும் புத்தாக்க தொழில் முனைவோர்களுக்கு ஆதரவு தரும் தமிழ்நாடு மற்றும் ஒன்றிய அரசின் துறைகள் அனைத்தும் பங்கேற்று இருந்தன. கோவையை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பெண் தொழில்முனைவோர்களுக்கான பிரத்யேகமான அரங்கம் ஆகியவையும் கண்காட்சியில் இடம்பெற்று இருந்தன. கூகுள், மெட்டா, போன்பே போன்ற நிறுவனங்களின் தனித்துவமான பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

பிரான்ஸ் நாட்டின் லிங்க் இன்னோவேஷன்ஸ், கனடா நாட்டின் ஆர்எக்ஸ் என்ஹப், ஜெர்மனி நாட்டின் ஆசியா பெர்லின் அமைப்பு உள்ளிட்ட பன்னாட்டு தொழில் அமைப்புகள் மற்றும் முன்னணி கார்ப்பரேட் நிறுவனங்கள் பலவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறி கொள்ளப்பட்டுள்ளன. 2 நாட்களில் மொத்தம் 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறி கொள்ளப்பட்டன.

இதனால் தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு உலகளாவிய அளவில் புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகும். மேலும் சிறப்பு வாய்ந்த தொழில்வளர் பயிற்சிகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டின் புத்தொழில் சூழல் வலுப்பெற்று முதலீட்டாளர்களின் நம்பிக்கை உயர்ந்து வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். இது தமிழ்நாட்டை 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவாக்கும் இலக்கை நோக்கி நகர்த்தும் முக்கிய அடித்தளமாக அமைந்தது.

# உத்திரமேரூர் ஏரி நிரம்பியது: க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!

## க.செல்வம் எம்.பி. – ஹெமலதா ஞானசேகரன் – கழகத்தினர் பங்கேற்பு

காஞ்சிபுரம், அக். 20 -

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஏரி (வைரமேக தடாகம்) நேற்று நிரம்பியதை அடுத்து நேற்று (19.10.2025) நரிமடை யில் நீர் வழிந்து வெளியேறியது.

தகவல் அறிந்த காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் விரைந்து வந்து, ஏரியின் பாதுகாப்புப் பணிகளை பார்வையிட்டு, நீர் வெளியேறுவதை மலர் தூவி வரவேற்றார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம்., ஒன்றியகுழு தலைவர் ஹேமலதா ஞானசேகரன்,

ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பொன்.சசிகுமார், ஒன்றிய துணை செயலாளர்கள் எஸ்.தயாளன், சுகுணா சுந்தரராஜன், இளைஞரணி. ஆதிநாராயணன், கோபிநாத், ஊராட்சி தலைவர் கிருஷ்ணன், ஒன்றியகுழு உறுப்பினர் கலைச்செல்வி உமாபதி, முன்னாள் தலைவர் பெருமாள் மற்றும்கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# ஆரணி பேரூரில் 500 பேருக்கு நல உதவிகள்!

## எஸ்.ரோஸ் பொன்னையன் ஏற்பாட்டில் வழங்கல்

திருவள்ளூர், அக். 20 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் - பொன்னேரி தொகுதி ஆரணி பேரூராட்சியில் மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஆகியோரது ஆலோசனைப்படி, கழகத்தினர் - பொதுமக்கள் 500 பேருக்கு விழாக்கால பரிசுத் தொகை, இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நேற்று 19.10.2025 மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ்பொன்னையன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் ஆரணி பேரூர் செயலாளர் பி. முத்து முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆரணி பேரூரை சார்ந்த கழகத்தி னர் - பொதுமக்கள் 500 பேருக்கு இனிப்பு, விழாக் கால பரிசுத் தொகை வழங்கினார்

இதில் பேரூர் நிர்வாகிகள் கரிகாலன், நீலகண்டன், ஜெயக்குமார், பிரபு, பிரபாகரன், சுல்தான், நாகராஜ், பாஸ்கர், சாலேக், முரளி, சாய் சத்யம், ஈஷா ஜாவித்,சூர்யா, ஜி பாஸ்கர், ராஜா, மாடசாமி மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முகாமில் கலந்து கொண்டனர்.

# பீகார் தேர்தல்: வேட்பு மனு நாளை முடிவடைகிறது!

பாட்னா, அக். 20 -

பிகார் சட்டப்பேரவைத் தேர்தலின் இரண்டாம் கட்டத்திற்கான 122 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் திங்கள்கிழமை(அக்.20) முடிவடைவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிகார் சட்டப்பேரவைத் தேர்தலின் இரண்டாம் கட்டத்திற்கான 122 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் திங்கள்கிழமை(அக்.20) முடிவடைவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

243 தொகுதிகளைக் கொண்ட பிகார் பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடத்தப்படும். நவ.6 ஆம் தேதி நடைபெறும் முதல் கட்டத்தில் 121 தொகுதிகளுக்கும், நவ.11 ஆம் தேதி இரண்டாம் கட்டமாக 122 தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடைபெறும்.

தேர்தலில் பதிவான வாக்குகள் நவ.14 ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

முதல்கட்டத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அக்.17 கடைசி நாளாகும். வேட்புமனு பரிசீலனை அக்.18 இல் நடைபெறும், வேட்புமனுவைத் திரும்பப் பெற அக்.20 கடைசியாகும்.

இரண்டாம் கட்டத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய அக.20 கடைசி நாளாகும். வேட்புமனு பரிசீலனை அக்.21 இல் நடைபெறும். வேட்மனுவைத் திரும்பப் பெற அக்.23 கடைசி நாளாகும்.

இந்நிலையில், இரண்டாம் கட்டத்திற்கான 122 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் திங்கள்கிழமை (அக்.20) முடிவடைவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மாநிலத்தின் 20 மாவட்டங்களில் உள்ள 122 தொகுதிகளில் நவம்பர் 11 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். வேட்பாளர்கள் அக்டோபர் 23 ஆம் தேதி வரை தங்கள் வேட்புமனுக்களை திரும்பப் பெறலாம்.

இதற்கிடையில், 121 தொகுதிகளை உள்ளடக்கிய முதல் கட்டத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கடைசி தேதி திங்கள்கிழமை (அக்.20).

பாஜக மற்றும் ஐக்கிய ஜனதா தளம் ஆகியவை தேர்தல் பிரசாரத்திற்காக தங்கள் நட்சத்திர பிரசார பேச்சாளர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. தீபாவளிக்குப் பிறகு பிரசாரம் மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், மாநிலத்தில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்வதற்காக காவல்துறை மற்றும் மாநிலத்தில் உள்ள பல்வேறு அமலாக்கத் துறையினர் சோதனைகளை நடத்தி வருகின்றன.

வருமான வரித் துறை, மாநில காவல்துறை மற்றும் கலால் துறையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அக்டோபர் 6 ஆம் தேதி முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததிலிருந்து இதுவரை ரூ.2.73 கோடி கோடி பணம், ரூ.22 கோடி மதிப்புள்ள மதுபானங்கள், ரூ.16.21 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பொருட்கள் மற்றும் ரூ.5 கோடி மதிப்புள்ள விலைமதிப்பற்ற உலோகங்கள் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

மேலும், வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக வைக்கப்படிருந்த ரூ.12 கோடி மதிப்புள்ள பரிசுகள் மற்றும் இலவசப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு வெற்றி பெற உழைத்திட்ட கழக நிர்வாகிகளுக்கு கழகத் தலைவர் உருவம் பொறித்த கைகடிகாரங்கள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு நிர்வாகிகளுக்கு கைகடிகாரம் வழங்கினார் உடன் பேரூர் கழகச் செயலாளர் சி.ஜெ.செந்தில்குமார் அவைத் தலைவர் திருமலை லோகநாதன் பேரூராட்சி மன்ற தலைவர் எஸ். மணிமேகலை உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் – பொன்னேரி தொகுதி ஆரணி பேரூராட்சியில் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஆலோசனைப்படி, கழகத்தினர் – பொதுமக்கள் 500 பேருக்கு இனிப்பு, விழாக்கால பரித் தொகை நேற்று 19.10.2025 மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ்பொன்னையன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. இதில் பேரூர் செயலாளர் முத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் : 20.10.2025 திங்கட்கிழமை | நேரம் : காலை 10.00 மணி | இடம் : பன்பாக்கம், இல்லம்

கும்முடிப்பூண்டி கி.வேணு Ex. MLA.,

முன்னாள் திருவள்ளூர் மாவட்ட கழகச்செயலாளர்

முன்னாள் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



சிறைக்கு அஞ்சா சிங்கமே!

மிசா கண்ட மாவீரரே!

வணக்கங்களுடன்...

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.,

தலைமைச்செயற்குழு உறுப்பினர் ■ கும்முடிப்பூண்டி சட்ட மன்ற தொகுதி